## திராவிடத்தால் வாழ்கிறோம்

856

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

ர.பிரகாசு

123

திறன்களை வளர்த்து, சர்வதேச அளவிலான போட்டிக்குத் தயார்படுத்திக்கொண்டிருக்கிறது 'நான் முதல்வன்' திட்டம். அதுபோல, கட்டமைப்பு வசதிகளையும் பார்த்துப் பார்த்து செய்துகொண்டிருக்கிறது திராவிட மாடல் அரசு. அந்த வரிசையில், 11 புதிய அரசுக் கலை-அறிவியல் கல்லூரிகளை தமிழ்நாட்டுக்கு அர்ப்பணித்திருக்கிறது திராவிட மாடல் அரசு.

உள்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டு, 26.05.2025 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலிக் காட்சி வாயிலாக முதலமைச்சர் திறந்து வைத்தார். வரும் 2025-26 கல்வி ஆண்டு முதலே அனைத்துக் கல்லூரிகளும் செயல்பாட்டுக்கு வரவுள்ளன. இந்தப் புதிய கல்லூரிகள் ஒவ்வொன்றும் தலா 5 பாடப் பிரிவுகளுடன் இயங்கும் என அறிவிக்கப் பட்டுள்ளது. ஓராண்டுக்கு 3,050 மாணவர்கள்




# 11 புதிய அரசுக் கலை-அறிவியல் கல்லூரிகள்!

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

தமிழ்நாட்டின் உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதம் 47%. இது இந்தியாவின் மற்ற மாநிலங்களால் எட்ட முடியாத உயரம். உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் அகில இந்திய சராசரியே 27%ஆக மட்டுமே உள்ளது. ஆனால், இது பல்கலைக்கழகத் தகவல் மேலாண்மை அமைப்பு யு.எம்.ஐ.எஸ் (UMIS) தரும் புள்ளிவிவரங்களின் அடிப்படையிலானது. இந்த யு.எம்.ஐ.எஸ் (UMIS) அமைப்பு இன்னும் முழுமையாக நிறுவனமயமாக்கப்படாததால், தமிழ்நாட்டில் உள்ள சில கல்வி நிறுவனங்களின் மாணவர் சேர்க்கைத் தரவுகள் இதில் விடுபட்டிருக்கலாம். அதனால், தமிழ்நாட்டின் உயர்கல்வி மாணவர் சேர்க்கையின் உண்மை யான விகிதம் 60 சதவிகிதத்தைக் கடந்திருக்கும் என்றும் சில கணிப்புகள் கூறுகின்றன. அதிகாரப்பூர்வமாகவே, பெண்கள் உயர்கல்விச் சேர்க்கை விகிதம் 47.3%-ஆக உள்ள ஒரே மாநிலம் தமிழ்நாடு. சில மாநிலங்களில் ஆண்களின் உயர்கல்விச் சேர்க்கை விகிதமே இதைவிடக்குறைவுதான்.

### உயர்கல்வியின் பொற்காலம்!

கல்விக்காகவும், மகளிர் உரிமைகளுக்காகவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றிய பங்களிப்பும் தீட்டிய திட்டங்களும் தமிழ்நாட்டின் பள்ளிக்கல்வியில் பெரும் பாய்ச்சலாக உருவெடுத்தது என்றால், அவரின் நீட்சியாக 'திராவிட மாடல் நாயகர்' முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் உயர்கல்விக்காக தீட்டிய திட்டங்கள், தமிழ்நாட்டின் உயர்கல்வி வரலாற்றிற்கு புதிய அத்தியாயத்தைஎழுதிக்கொண்டிருக்கின்றன. 'புதுமைப்பெண்', 'தமிழ்ப்புதல்வன்' திட்டங்களின் மூலம் தரப்படும் மாதம் ஆயிரம் ரூபாய் பணம், கல்லூரிக் கனவை கானல் நீராக்கிக் கொண்டிருந்த ஏழை- எளிய குடும்பங்களின் கனவுத் தாகத்தைத் தீர்த்தது. மாணவர்களின்

### புதிய கல்லூரிகளுக்கான அறிவிப்புகள்!

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்கெனவே அரசுக் கலைக் கல்லூரிகள் இருந்தாலும், ஏழை, எளிய கிராமப்புற மாணவ, மாணவிகளின் உயர்கல்வித் தேவையை நிறைவுசெய்யும் நோக்கில் அரசுக் கலை-அறிவியல் கல்லூரிகளின் எண்ணிக்கையை உயர்த்தும் முயற்சியில் முழுவீச்சாக ஈடுபட்டுள்ளது, திராவிட மாடல் அரசு. குறிப்பாக, சென்னை மாவட்டம் ஆலந்தூர், செங்கல்பட்டு - செய்யூர், விழுப்புரம் - விக்கிரவாண்டி, பெரம்பலூர் - கொளக்காநத்தம், தஞ்சாவூர் - திருவிடைமருதூர், திருவாரூர் - முத்துப்பேட்டை, நீலகிரி - குன்னூர், திண்டுக்கல் - நத்தம், சிவகங்கை - மானாமதுரை, தூத்துக்குடி - ஓட்டப்பிடாரம் ஆகிய இடங்களில் 10 புதிய அரசுக் கலை, அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று 2025-26-ஆம் ஆண்டுக்கான உயர்கல்வித்துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது. மேலும், பண்ருட்டியில் புதிய அரசுக் கலை-அறிவியில் கல்லூரி தொடங்கப்படும் என்று கடலூரில், கடந்த பிப்ரவரி மாதம் நடைபெற்ற அரசு விழாவில் முதலமைச்சர் அறிவித்தார்.

### 11 கல்லூரிகள் திறப்பு!

அதன்படி 11 கல்லூரிகளும் தரமான



> திராவிட மாடல் அரசு உயர்கல்வித்துறையின் பொற்கால ஆட்சியாக அடையாளம் பெற்றுள்ளது!

### உயரும் உயர்கல்வித்துறை!

வீதம் 3 ஆண்டுகளுக்கு 9,150 மாணவர்கள் பயன்பெறுவார்கள். ஒவ்வொரு கல்லூரிக்கும் 12 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் (முதல் ஆண்டுக்கு மட்டும்), 14 ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் என 11 கல்லூரிகளுக்கும் மொத்தம் 132 உதவிப் பேராசிரியர்கள், 154 ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. 11 கல்லூரி களுக்கும் ஓராண்டுக்கான தொடர் மற்றும் இதர செலவினமாக ரூ.25.27 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### மேலும் புதிய கல்லூரிகள்!


இந்த 11 புதிய கல்லூரிகளால் தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் அரசு மற்றும் கலை-அறிவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 176-ஆக உயர்ந்துள்ளது. கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் முதல் ஐந்தாண்டுகளில் 18 கல்லூரி களும், 2016-21 வரையிலான இரண்டாவது ஐந்தாண்டில் 22 கல்லூரிகளும் தொடங்கப் பட்டன. ஆனால், திராவிட மாடல் அரசு முதல் நான்காண்டில் மட்டுமே 37 கல்லூரிகளைத் திறக்க ஆணையிட்டுள்ளது. மேலும் வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம், திருச்சி மாவட்டம்,



துறையூர், கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர் பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் ஆகிய இடங்களில் புதிதாக 4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை உருவாக்க, முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இதன்மூலம் வருங்காலத்தில் 1,120 மாணவர்கள் உயர்கல்வி பெறுவார்கள். அதனால்தான் திராவிட மாடல் அரசு உயர்கல்வித்துறையின் பொற்கால ஆட்சியாக அடையாளம் பெற்றுள்ளது!

...சாதனை தொடரும்

## பதிப்பாளர்களின் ஆதரவும் அறிக்கையும்...




முத்தமிழறிஞர் கலைஞர் சென்னையில் உருவாக்கிய 'அண்ணா நூற்றாண்டு நூலகம்' போல, மதுரையில் 'கலைஞர் நூற்றாண்டு' நூலகத்தை உருவாக்கியது தமிழ்நாடு அரசு. தொடர்ந்து, கோவை, திருச்சி, நெல்லை என முக்கிய நகரங்களில் மாபெரும் நூலகங்களைத் திறக்கவும் திட்ட மிட்டுள்ளது.

இந்த நிலையில், தமிழ்நாட்டில் உள்ள பொது நூலகங்களுக்கு, நூல்களைக் கொள்முதல் செய்வதில், தமிழ்நாடு அரசு மாபெரும் சாதனை நிகழ்த்தியுள்ளது என, பதிப்பாளர்கள் கூட்டறிக்கையாக அரசிற்கு ஆதரவையும் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, பொது நூலக இயக்ககம் கடந்த ஆண்டு அறிவித்த வெளிப்படைத் தன்மையான நூல் கொள்முதல் திட்டத்தின்படி, தற்போது நூலக ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மொத்தம் 11,000 நூல்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளன. இதில் முதல் நிலைத்தேர்வில் 8 ஆயிரத்து 630 நூல்கள் தேர்வுசெய்யப்பட்டு, விலை தொடர்பாக, பதிப்பாளர்களுடன் இணையம் வழியாக நடந்த பரிமாற்றத்திற்குப் பின்னர் 6 ஆயிரத்து 416 நூல்களுக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. ஆணை வழங்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ.37 கோடி.

இந்த வெளிப்படையான நூலகத் தேர்வினை முழுமனதுடன் வரவேற்கிறோம் எனக் குறிப்பிட்டுள்ள பதிப்பாளர்கள், இந்த முயற்சியின் மூலம், 'நூலகங்கள் மேம்படும், வாசிப்பு செழிக்கும் என நம்புகிறோம்' எனக் குறிப்பிட்டுள்ளனர். எல்லாவற்றையும் விட முக்கியமாக, புத்தக ஆணையை இந்த கொள்முதல்முறை ஜனநாயகப்படுத்தியுள்ளது எனக் கூறியுள்ளனர்.

ஜனநாயகத்துக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் கழக அரசு, ஜனநாயக வெளியை விரிவுபடுத்தும்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவர் மேடையில், நான் சிறுவனாக...



கீரை.தமிழ் இராஜா

1988-ஆம் ஆண்டு, ஜூன் மாதம், 6-ஆம் தேதி, அன்று புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூரில் கழக தேர்தல் நிதியளிப்புக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் பங்கேற்று அன்றைய கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் உரையாற்றும் போது, மாவட்டக் கழக முன்னோடி எனது தந்தை கீரை.தமிழ்ச்செல்வன் இருக்கைக்குக் கீழே அமர்ந்து தலைவரின் உரையை கேட்டுக்கொண்டிருந்தேன். கழகப் பணியில், எனது பயணத்தை இந்தப் படம் திரும்பிப் பார்க்க வைக்கும்.

– **கீரை.தமிழ் இராஜா, பி.ஏ.பி.எல்,**
**தலைமைச் செயற்குழு உறுப்பினர்,**
**புதுக்கோட்டை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### மேயர் - துணை மேயர்!

1959-ஆம் ஆண்டில், நவம்பர் மாதம் 30-ஆம் தேதி கூட்டப்பட்ட சென்னை மாநகராட்சி மன்றக் கூட்டத்தில், கழகத் தோழர் எம்.எஸ்.அப்துல் காதர் மேயராகவும், தோழர் என்.எஸ்.தேவராசன் துணை மேயராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131